**குளியாபிடிய பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 18 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 09 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 07 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் குளியாபிட்டிய பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 16,201,208 தொகையான நானாவித கடன்கொடுத்தோர் பேரேட்டுக் கணக்கொன்றாக பேணிச்சென்ற காரணத்தினால் தனியால் கணக்கு மீதிகள் இனங்காண முடியாமல் இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் சபைக்குச் சொந்தமான 10 வழக்கு நடவடிக்கைகளுக்கு கடப்பாடு இருந்த போதிலும், அத்தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அவற்றை வெளிப்படுத்துவதற்காக கருத்திற் கொள்வதற்கு போதியளவு கணக்கீட்டுக் கொள்கையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்ட கணக்கீட்டு குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) புறநெகும செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபை அலுவலக கட்டிடத்தின் கிரயமான ரூபா 40,287,354 பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் ஆண்டின் இறுதியில் சபை அதிகாரப் பிரதேசத்தில் கிதலவ மற்றும் ஹொரம்பாவ ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட வாரச்சந்தை நிர்மாணக் கிரயத்தைப் பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆதனங்களை ஏலவிற்பனை செய்யும் போது சபை பொது வசதிகளுக்காக ‘‘முருத்தன்கே இன்னாவத்த’’ காணியில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட 02 ரூட் 01.06 பேர்ச் பகுதியினதும் ‘‘இங்குருவத்த நில்திய பொக்குன’’ காணியின் 02 ரூட் 30 பேர்ச் பகுதியினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்குரிய உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய சம்பள நிதியத்திற்கு செலுத்த வேண்டிய 05 மாதாந்த தவணைகளின் பெறுமதியான ரூபா 77,372 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அப்பெறுமதியால் செலவினம் மற்றும் செலவினக் கடன்கொடுத்தோர் மீதி குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்த முத்திரைக் கட்டண வருமானமான ரூபா 72,842,400 ஆன சபையின் உழைக்கப்படாத வருமானமான ஏனைய வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், உழைத்த வருமானமான சேவைக் கட்டணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 69,268,484 தொகை முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டிய போதிலும், ரூபா 42,500,000 தொகை மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 16,881,501 ஆன நீதிமன்றத் தண்டப்பணத்திற்காக ரூபா 8,070,759 எனக் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் ரூபா 8,810,742 வீதம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 05 கணக்கு விடயங்களுக்குரிய பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் தொடர்புடைய துணைப் பதிவேடுகளின் பிரகாரம் காணப்பட்ட நேரோத்த மீதிகளுக்கு இடையே ரூபா 21,684,231 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 58,283,758 ஆக இருந்ததுடன், அவற்றில் ரூபா 663,448 பெறுமதியான மீதிகளுக்காக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 170,230 தொகையான மீதிகள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாத மீதிகளாக காணப்பட்டன.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

(i) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 28,082,384 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றின் ரூபா 19,795,935 பெறுமதியான மீதிகளுக்காக காலப்பகுப்பாய்வு ஒன்று சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் நீண்டகாலமாக இருந்து வரும் தகவல் சமர்ப்பிக்கப்படாத ரூபா 254,516 ஆன 03 மீதிகள் காணப்பட்டன.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

முன்னைய ஆண்டுகளிலிருந்து வரும் ரூபா 19,795,935 ஆன செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர் மீதிகள் உருவான முறை காண்பிக்கப்பட்ட அட்டவணையொன்று சமர்ப்பிக்கப்படாததன் பேரில் தெரிவு அடிப்படையில் திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 73,942,450 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,115,357 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 65,827,093 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவுகளிற்கு ரூபா 22,021,196 ஆன மூலதன உதவி மற்றும் ரூபா 88,919,364 இற்கான மூலதன செலவுகளை சீராக்கம் செய்த போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 7,044,282 ஆன மிகை ஒன்றாக மாறியிருந்தது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | வருமானம் 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | செலவினம் 2015 | 2014 | முரண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 96,223 | 31,568 | 64,655 | தனிப்பட்ட வேதனம் | 62,359 | 44,646 | 17,713 |
| (ii) | ஏனையவை | 65,340 | 48,240 | 17,100 | ஏனையவை | 25,261 | 27,047 | (1,786) |
| | உப மொத்தம் | 161,563 | 79,808 | 81,755 | உப மொத்தம் | 87,620 | 71,693 | 15,927 |
| (iii) | மூலதன வருமானம் | 22,021 | 106,743 | (84,722) | மூலதன செலவினம் | 88,919 | 99,198 | (10,279) |
| | மொத்தம் | 183,584 | 186,551 | 2,967 | மொத்தம் | 176,539 | 170,891 | 5,648 |
| | செயற்பாட்டு விளைவு | 73,943 | 8,115 | 65,828 | மிகை | 7,045 | 15,660 | (8,615) |

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 161,563,033 தொகையில் 85 சதவீதமான அதாவது ரூபா 138,182,338 தொகை சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளைக் கொண்டிருந்தன. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 2,021,196 ஆன மொத்தத் தொகையும் மாகாண திட்டவட்டமான, மற்றும் பிரதேச சபைகளைப் பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஆகிய வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு வழங்கியிருந்த பணம் ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 87,620,584 தொகையில் அண்மித்த 71 சதவீதமான அதாவது ரூபா 62,359,321 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவுகளாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 86 சதவீதமான அதாவது ரூபா 53,645,665 என சம்பள மீளளிப்பாக உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மூலதனச் செலவினமான ரூபா 88,919,364 தொகையில் 10 சதவீதமான அதாவது ரூபா 9,514,826 தொகை நிலையான சொத்துக்களை கையேற்பதற்காகவும் எஞ்சிய 90 சதவீதமான ரூபா 79,404,538 தொகை பௌதீக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குற | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குற |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 720 | 644 | 633 | 920 | 927 | 702 |
| (ii) குத்தகை வாடகை | 6,785 | 6,751 | 27 | 5,608 | 5,608 | 646 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,082 | 1,142 | - | 910 | 915 | 58 |
| (iv) ஏனைய வருமானம் | 81,988 | 153,025 | 50,851 | 179,057 | 72,357 | 72,144 |
| மொத்தம் | 90,575 | 161,562 | 51,511 | 186,495 | 79,807 | 73,550 |

**2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | | | | வருமான சேகரித்தல் | | | நிலுவை மீதி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப் பட்ட வருமானத்தில் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் | 2015/12/31 இல் நிலுவை கணிப்பீட்டின் பிரகாரம் | 2015/12/31 உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா.000 | ரூபா000 | ரூபா. 000 | ரூபா000 | ரூபா 000 | ரூபா000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | 639 | 706 | 1,345 | 307 | 632 | 939 | 332 | 74 | 406 | 633 |
| வாடகை | 126 | 4,217 | 4,343 | 105 | 4,226 | 4,331 | 21 | (9) | 12 | 27 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 72 | 1,080 | 1,152 | 72 | 1,080 | 1,152 | - | - | - | - |
| ஏனைய வருமானம் | 22,438 | 153,026 | 175,464 | - | - | 123,336 | - | - | 52,128 | 50,851 |
| மொத்தம் | 23,275 | 159,029 | 182,304 | 484 | 5,938 | 129,758 | 353 | 65 | 52,546 | 51,511 |

(அ) சபையின் வருமான பதிவேடுகளை பேணிச்செல்வதில் குறைபாடுகள் காரணமாக கணிப்பிடலின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதிகள் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படும் மீதிகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருந்ததுடன் ஏனைய வருமான சேகரிப்பு பட்டியலிடல் மற்றும் நிலுவை பெறுவனவாக தயாரிக்கப்பட்டிருக்கிவ்லலை.

(ஆ) வீத வரி மற்றும் வரியின் கீழ் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 705,650 ஆன வருமானம் பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 632,390 அதாவது 90 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 633,446 ஆன நிலுவையாக இருந்ததுடன், அது வருடாந்த பட்டியலிடலில் அண்ணளவாக 90 சதவீதமாக இருந்தது. 2016 யூலை மாதம் வரை இந் நிலுவை மீதியிலிருந்து ரூபா 136,941 தொகை அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.3 வீதவரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போதுஆதன்ங்களின் வருடாந்த பெறுமதி புதிய மதிப்பீடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அதன் பின்னர் மேற்கொண்ட புதிய நிர்மாணங்களுக்காக அங்கீகரிக்கப்படும் நிர்மாணங்கள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு இணங்கச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்த வீதவரி திருத்தம் செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதவரி பதவேடு காலாண்டு இறுதியிலவ் சமப்படுத்தப்பட்டதன் பின்னர் காலாண்டிற்குரிய நிலுவை தீர்மானிக்கப்பட்டு நிலுவைப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 348,718 ஆன நிலுவை வீதவரி மீதி காணப்பட்ட போதிலும் அந்நிலுவைக்குரிய காலத்தை இனறங்காணும் இயலுமை காணப்படவில்லை.

### 2.3.4 ஏக்கர் வரி

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஏக்கர் வரி நிலுவை மீதி ரூபா 284,728 ஆக இருந்ததுடன் நிலுவை ஆவணங்களை தயாரிக்கப்படாமை காரணமாக அந்நிலுவைக்குரிய காலத்தை இனங்காண முடியாதிருந்தது.

**2.3.5 வாடகை**

(அ) கட்டுபொத்த 03 முதல் 12 ஆம் இலக்க 10 கடைகள் 2014 யூன் 26 ஆந் திகதி சபைக்கு கையேற்கப்பட்டிருந்தன. இக்கடைகள் 2015 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்கு வழங்கும் போது கேள்வி விளம்பரம் உள்ளடக்கப்பட்டு குத்தகைக்கு வழங்குவதற்கு செயற்படாதிருந்ததுடன் அதன் காரணமாக 2015 ஆம் ஆண்டில் இந்த 10 கடைகளிலிருந்து பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்த வாடகை இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 1,199,383 கூட்டுத்தொகையான 34 சொத்துக்கள் 2015 ஆம் ஆண்டிற்காக கேள்வி மூலம் குத்தகைக்கு வழங்குவதற்காகவும் இரண்டு தடவை விலைகோரல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கேள்வி முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத் தொகை ரூபா 3,810,742 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 42,504,730 தொகையாக இருந்தது.

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

(அ) காணி ஆணையாளர் நாயகத்தின் மூலம் முத்திரைக் கட்டணப் பதிவேடு தயாரிக்கப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டிற்கான ரூபா 1,545,000 தொகை 2011 ஆம் ஆண்டிற்கான ரூபா 625,300 மற்றும் 2013 ஆம் ஆண்டிற்கான ரூபா 714,500 என மொத்தம் ரூபா 2,884,800 ஆன முத்திரைக் கட்டணம் மாகாண இறைவரித் திணைக்களத்திற்குச் செலவு வைக்கப்படாமையினால் அத்தொகையை விடுவிக்க முடியாதென குறிப்பிடப்பட்ட மாகாண வரி ஆணையாளரினால் பிரதான செயலாளருக்கு அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் இந்நிலைமையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உற்பத்தி செய்யப்படுகின்ற அச்சுக்கல் ஒன்று ரூபா 24 வீதம் சபைக்குக் கொள்வனவு செய்யும் நிபந்தனையின் கீழ் ரூபா 130,862 பெறுமதியான கொங்கிரீட் அச்சுக்கல் இயந்திரம், 05 அச்சுக்கற்களைப் பதப்படுத்தும் தாங்கிகள் மற்றும் கற்களைக் காய வைக்கும் பலகை அச்சு என்பனவற்றை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் உடன்படிக்கையின் கீழ் 2013 மே 02 ஆம் திகதி ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2013 நவம்பர் 21 ஆம் திகதி முதல் அச்சுக்கல் உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தது.

(இ) மெட்டி வெவ கிராமத்தின் மட்பாண்டக் கைத்தொழிலை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி நிதிஏற்பாட்டு மூலம் ரூபா 350,532 தொகை மாத்திரம் செலவு செய்து செயற்படுத்தப்பட்டிருந்தது. முறையான மேற்பார்வையொன்று அல்லது பின்தொடர் நடவடிக்கை இல்லாமை காரணமாக செயற்பாடு இடையில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மீண்டும் தொடர் நடவடிக்கை செயற்படுத்தும் மட்டத்திற்கும் எடுப்பதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்றை செயற்படுத்துவதாக 2016 ஜனவரி 27 ஆம் திகதி சபையின் செயலாளரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 மே 30 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பள்ளேகெதர கொலன்கொல்ல (ஏக்கர் 05) ஹையால காணி (03 ஏக்கர் 03 ரூட் 20 பேர்ச்) மற்றும் ஹொரம்பாவ குருகல்கொடை வத்த காணி (03 ஏக்கர் 25 பேர்ச்) ஏல விற்பனை செய்யும் போது சபையின் பொது நடவடிக்கைகளுக்காக

ஒதுக்கப்பட்ட காணிப்பகுதி உறுதி மூலம் சபைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டில் ஏல விற்பனை செய்யப்பட்ட இரு காணிகளைப் பரிசோதித்த போது 1 சதவீத வரித்தொகைக் கொடுப்பனவு செய்வதற்கு மதிப்பீடு பெறுமதியாகப் பெற்றுக் கொண்ட பணம் மற்றும் விற்பனையாளர் அறிவித்தல் மூலம் விளம்பரப்படுத்தப்பட்ட காணியின் குறைந்த விலை கருத்திற் கொள்ளப்பட்ட போதிலும் ரூபா 157,273 தொகை மேலும் பெற்றுக் கொள்வதற்கு இருந்ததாக அவதானிக்கப்பட்டதுடன் துணை விதியின் 14(2) பிரகாரம் காலாண்டு விற்பனை தொடர்பாக அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டு விற்பனை விலை அடிப்படையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து 2011 ஆண்டிற்கு முன்னர் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 140,418 தொகை ஓய்வு பெற்ற 09 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,289 மற்றும் மரணித்த 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறிவிடப்பட வேண்டிய ரூபா 4,150 உமாக ரூபா 149,857 ஆன நிலுவை ஊழியர் கடன் மீதிகள் காணப்பட்டன.

### 3.2 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

தலைமை அலுவலகம், 03 உப அலுவலகங்கள் 03 வாரச் சந்தைகள் உட்பட அதிகாரப் பிரதேசம் பூராகவும் சேரும் கழிவுப் பொருட்கள் உக்கும் அல்லது உக்காத என வேறுபடுத்தி சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், கழிவுப்பொருள் மீள்சுழற்சி, சபையின் மூலம் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் சேகரிக்கும் கழிவுப்பொருள் அடங்கியுள்ள பொலித்தீன் விற்பனைக்காக வேறாக்கப்பட்டு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து உக்கும் கழிவுப்பொருட்கள் அலஹிட்டியாவ தனியார் காணியில் இடுவது மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 4.2.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

2014 ஆம் ஆண்டின் போது உள்ளுராட்சி திணைக்களத்திடமிருந்து கிடைத்த டிரம் டிரக் வண்டி பதிவு செய்யப்படாமலும் வருமான அனுமதிப்பத்திரம், காப்புறுதி சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாமல் 2015 ஆம் ஆண்டில் 09 மாதங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) ஒப்பந்த நிர்வாகம்